# அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர்நகராட்சியில் பிப்ரவரி மாதம் ( 07.02.2018) ஆம் நாள் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள் .1**

கூடலூர் நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தேபொ1, நாள்.19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி வரைவு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.210 நாள்.15.12.2017ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக கடந்த 12.01.2018ம் தேதி வரை ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 21 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாநில தேர்தல் ஆணையர் அவர்களின் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலவலகத்தில் 06.02.2018 அன்று நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் வரப்பெற்ற ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் 6வது வார்டில் மறுவரையறை தொடர்பான கோரிக்கை மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்ற இதர கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டது. மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள்.31.01.2018ம் தேதிய கடிதத்தில் உள்ள வழிகாட்டுதலின்படி 21 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதை மாநில மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.238. ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் .2**

இந்நகராட்சியில் 2017–1.8 ஆம் ஆண்டிற்கு பொது சுகாதாரப்பிரிவின் கீழ் **TN 60 Y 8120** வாகனத்திற்கு **(FC)** தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கும் இந்நகர்மன்றத் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி 20.09.2017 அன்று ஒப்பநதப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம். **(ந.க.எண் : 2022/2017/எச்1)**

**தீர்மான எண்.238. ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | கிலோ ஒன்றுக்கு தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | டிவிஎஸ் அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>தேனி பெரியகுளம் ரோடு<br>தேனி. | ரூ117510/– |
| 2 | சேதுராம் மோட்டார் ஒர்க்ஸ்<br>பெரியகுளம் ரோடு<br>பெரியகுளம். | ரூ138520/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் TVS அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட்,தேனி நிறுவனமானது குறைந்த விலைவிகிதம் அளித்துள்ளது.குறைந்த விலை விகிதம் அளித்துள்ள TVS அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட், தேனி நிறுவனத்தின் விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்காணும் வாகனத்தின் (FC) பணி செய்ய குறைந்த விலை விகிதம் அளித்துள்ள TVS அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட்,தேனி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.239. குறைந்த விலைப்புள்ளி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் .3

கூடலூர் நகராட்சியில் சிறப்பு இயக்கம் 2018ன் வாக்குச்சாவடி நிலை அலுவலரின் கணக்கெடுப்புப் பதிவேட்டில் உள்ள வாக்காளர்களின் குடும்பம் வாரியாக விபரப்பட்டியலை eronet.ecinet.in எனும் வெப்சைட்டில் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யும் பணி செய்வதற்கு 29.12.2017ம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2727/2016/அ3)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | தொகை (வாக்காளர் ஒன்றுக்கு) ((ரூபாயில்)) |
|---|---|---|
| 1 | திரு.P.சரண்ராஜ், ரோஸ் கம்ப்யூட்டர்ஸ், கூடலூர். | ரூ.2.95 |
| 2 | ஆப்பிள் கம்ப்யூட்டர்ஸ், வேலப்பர் கோவில் தெரு, கம்பம். | ரூ.3.25 |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில், மேலே கண்ட திரு.**P**.சரண்ராஜ், கூடலூர் அவர்கள் வாக்காளர் ஒன்றுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி திரு.**P**.சரண்ராஜ், கூடலூர் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.240. குறைந்த விலைப்புள்ளி ஒப்புதல் வழங்கப்பட்டது.**

பொருள்:4

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக்குத்தகை இனங்களுக்கான உரிம காலம் 31.03.2018 ல் முடிவடைவதால் 1.04.2018 முதல் 31.03.2021 முடிய மூன்றாண்டுகளுக்கு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி 31.01.2018 ஆம் நாள் கோரி 13.01.2018 ஆம் நாள் தேதிய தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான கட்டணம் ரூ. 22,579/—யை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.3015/2017/அ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.241. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்:5

கூடலூர் நகராட்சியில் 2016—2017— ஆம் ஆண்டு திட்டப்பணிகள் சம்மந்தமாக தினமணி நாளிதழ் தொழில் மலரில் பிரசுரம் செய்தமைக்கு செலவினம் தொகை ரூ.15,750/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2234/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.242. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.6

கூடலூர் நகராட்சியில் 2017—2018 ஆம் ஆண்டு 14—ஆம் மாநில நிதிக்குழு மான்யத்திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள சாலைபணியினை தினமணி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்குரிய பட்டியல் தொகை ரூ.19,248/—ஐ **EXPRESS PUBLICATIONS (Madurai) Limited** அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.2470/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.243. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களை அவ்வப்போது தொடர்பு கொள்ளவும் உயர்அதிகாரிகளால் உடனடியாக கேட்கப்படும் விவரங்களுக்கு உரிய முறையில் தகவல் பரிமாற்றம் செய்ய தேவையான உள்ளீடு அட்டை **(SIMCARD)** பெறும் பொருட்டு வோடாபோன் **(VODAFONE)** நிறுவனத்திடமிருந்து 11.10.17 முதல் 04.11.17 வரைக்கான பட்டியல் தொகை ரூபாய் **5098/–** க்கு செலவினப் பட்டியல் வரப்பட்டுள்ளது. அதனை மேற்காணும் நிறுவனதிற்கு செலுத்தமன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது. **(ந.க.எண்.2925/2017/அ3)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூபாய் 5098/– செலுத்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவு மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.244. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சியில் உள்ள அம்மா உணவகத்தில் ஏற்கனவே உள்ள 10 KVA ஜெனரேட்டரை நகராட்சி அலுவலகத்திற்கும், நகராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள 20 KVA ஜெனரேட்டரை நகராட்சி பொதுமயானத்தில் உள்ள நவீன எரிவாயு தகனமேடைக்கும் மாற்றி அமைப்பதற்கும் மற்றும் இரண்டு ஜெனரேட்டர்களையும் ஆயில் சர்வீஸ் செய்து புதிய மின்கலன்கள் பொருத்தவும், ஆட்டோ மேட்டிக் பேனல் போர்டினை சரி செய்திடவும், தேவையான எர்த் பிட்டுகள்புதிதாக அமைத்து ஜெனரேட்டர்களை நிறுவிட உண்டாகும் செலவினம் ரூ.90,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.62/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.245. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

கூடலூர் நகராட்சியில் வார்டு எண் 4—ல் உள்ள சுந்தரராஜபுரத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தில் தரை டைல்ஸ், மேற்கூரை டைல்ஸ் மற்றும் வயரிங் வேலை செய்து முன்புறம் சிமெண்ட்தளம் அமைக்க **ரூ.1,25,000/—க்கு** தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**(ந.க.எண்.241/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.246. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.10

கூடலூர் நகராட்சியில் வார்டு எண் 1—ல் உள்ள பூசலமாயத் தேவர் சந்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க **ரூ.1,27,500/—க்கு** தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**(ந.க.எண்.240/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.247. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.11

கூடலூர் நகராட்சி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் பொளிரோ ஈப்பு வாகனங்கள் TN 60 R 6378, TN 60 Y 7332 – களுக்கு வரும் 09.03.2018, 18.04.2018 உடன் ஆயுள் காப்பீடு முடிவடையவதால் யுனைடெட் இண்டியா இன்சூரன்ஸ் கம்பம் நிறுவனத்தாருக்கு ஆயுள் காப்பீடு செலுத்தவும் வாகனத்தின் அவசியம் கருதியும் காப்பீடு செலுத்த ஆகும் உத்தேச செலவினம் **ரூ.40,000/—க்கு** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது **(ந.க.எண். /2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.248. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.12

இந்நகராட்சியில் வார்டு எண்.18 பொம்மையசாமி கோவில் தெருவிலுள்ள குடிநீர் இணைப்பு எண்.1224 பெருமாள் செட்டியார் பெயரில் உள்ளது. மேற்கண்ட இணைப்பிற்கு குடிநீர் நிலுவை வைப்பு தொகை ரூ.2,200/—ஐ 8.03.2017 ஆன்று செலுத்தி உள்ளார். மீண்டும் தவறுதலாக ரூ.2,200/—ஐ 19.12.2017 அன்று செலுத்தி உள்ளார். தவறுதலாக இரண்டாவது முறை செலுத்திய ரூ.2,200/— திரும்ப வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது **(ந.க.எண். 38/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.249. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.13

கூடலூர் நகராட்சியில் 14—ஆம் மாநில நிதிக்குழு மான்யத்திட்டம் 2017—2018 ன் கீழ் வார்டு எண்3 ல் உள்ள கள்ளர் வடக்கு கிழக்குத் தெருவில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்குப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு.P.முருகன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியினை மேற்கோள்ள அப்பகுதிக்கு செல்லும் போது அப்பகுதியிலுள்ள பொதுமக்கள், சாலையினை புதிதாக அமைக்கும் போது சாலையினை விட வீடுகள் தாழ்வாகி விடும் என்பதால் சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர் எனவே மேற்படி பணியினை இந்நகராட்சி வார்டு எண்7 ல் உள்ள பாரஸ்ட் பங்களா தெருவில் தார்ச்சாலை அமைத்திடவும் மேற்படி பணியின் மதிப்பீட்டுத்தொகையினை ரூ.10.00 இலட்சத்திற்கு ஒப்பந்ததாரர் திரு.P.முருகன் அவர்களின் மூலமாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 2470/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.250. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.14

கூடலூர் நகராட்சியில் 14—ஆம் மாநில நிதிக்குழு மான்யத்திட்டத்தின் கீழ் 2017—2018 வார்டு எண்3 ல் உள்ள கள்ளர் வடக்கு கிழக்குத் தெருவில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்குப்பகுதியில் மழைநீர் வடிகாலுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு.P.முருகன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியினை மேற்கோள்ள செல்லும்போது அப்பகுதி மக்கள்சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர். தற்போதுள்ள சாலையினை புதிதாக அமைக்கும் போது சாலையினைவிட வீடுகள் தாழ்வாக சென்று விடும் என்று சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே மேற்படி பணியினை இந்நகராட்சி வார்டு எண்—7 ல் உள்ள விதைப்பண்ணை சாலையில் தார்ச்சாலை அமைக்கவும் இப்பணியின் மதிப்பீட்டுத்தொகையினை ரூ.10.00 இலட்சத்தில் அதே ஒப்பந்ததாரர் திரு.P.முருகன்அவர்கள்மூலம்மேற்கொள்ளமன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது. **(ந.க.எண். 2470/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.251. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.15

இந்நகராட்சி ஆண்டுக் குத்தகை இனமான தினசரி சந்தைக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் தினசரி சந்தையில் உள்ள கடைகளுக்கு தரை வாடகை வசூல் செய்யும் உரிமம் இரண்டும் தனித்தனியாக ஏலம் விடப்பட்டு வந்தது. மேற்கண்ட இரண்டு உரிமங்களையும் தனித்தனியாக பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோருவதில் இரண்டு குத்தகைதாரர்கள் மேற்கண்ட உரிமத்தினை எடுப்பதால் தினசரி சந்தையில் வாடகை வசூலிக்கும்போது தேவையில்லாத சர்ச்சைகள் மற்றும் பிரச்சனைகள் ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட் இரு இனங்களையும் ஒன்றாக இணைத்து பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி விட்டால் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இரண்டு இனங்களையும் இணைத்து நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.3015/2017/அ1)**

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.252. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.16

நகராட்சி அலுவலக உபயோகத்தில் உள்ள பிரிண்டர்களுக்கு பயன்படுத்த கூடிய காலியான 88A மற்றும் 12A டோனர்களை REFILL செய்யும் பணிக்கு **02.02.2018** ம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2246 /2017/ இ1)**

| வ.எண் | நிறுவனத்தாரின் பெயர் | டோனர் எண் 88A 1 க்கு தொகை | டோனர் எண் 12A 1 க்கு தொகை |
|---|---|---|---|
| 1 | YES CARE SYSTEMS, CUMBUM. | ரூ.425/– | ரூ.400/– |
| 2 | BARANI SYSTEM SERVICE, CUMBUM. | ரூ.425/– | ரூ.400/– |

**அலுவலகக் குறிப்பு: –1)**வரப்பட்டஇரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.253. குறைவான விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்:17

கூடலூர் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள செலவினங்கள் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**(ந.க.எண்:1564/2015/இ1)**

| **வ.எண்** | **விபரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | வார்டு மறுவரையறை கூடலூர் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் வார்டு மறுவரையறை உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம் தமிழ்நாடு அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க கூடலூர் நகராட்சி 21 வார்டுகளில் எல்லைகள் மற்றும் எல்லைக்குட்பட்ட வண்ணம் மற்றும் மசூதி, கோவில்கள், பள்ளிகள் மற்றும் மொத்த குடும்பங்கள் தெருவாரியான மக்கள் தொகை போன்றவற்றை கணிணியில் ஆட்டோ கார்டுகளில் பதிவேற்றம் செய்து அவற்றை PDF-ல் மாற்றி வார்டு மறுவரையறை ஆணையம் தமிழ்நாடு அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிய வகையில். | 32,321 |

**அலுவலகக் குறிப்பு.** பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.254. பதிவு செய்யப்பட்டது.**

//உண்மை நகல்//

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
கூடலூர் நகராட்சி